மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஓட்டப்பிடாரம்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII,Cr.P.C)

| | | |
|---|---|---|
| வழக்கு எண். | : | CC 317/2023 |
| பெயர் | : | Dr.ஹேமலதா (PW5 / LW10) |
| த/பெ | : | முத்துகிருஷ்ணன் |
| வயது | : | 35 |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| Calling | : | Doctor |

(Accused Kuttiraj present.

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 19th day of June 2026

**முதல் விசாரணை**

1) நான் தற்போது புதுக்கோட்டை ஆரம்பசுகாதார நிலையயத்தில் மருத்துவராக பணியாற்றி வருகின்றேன். நான் ஓட்டப்பிடாரம் அரசு மருத்துவமனையில் மருத்துவராக இருந்த போது 20.09.2022 இரவு 08.50 மணிக்கு ஜம்புலிங்கபுரம் கீழத்தெருவைச்சேர்ந்த விஜயா வயது 60 என்ற பெண் நபர் அவர் மகள் கீதா என்பவருடன் மருத்துவமனைக்கு வந்தார். 20.09.2022 மாலை 06.30 மணியளவில் அவரது வீட்டில் அருகில் வைத்து அடையாளம் தெரிந்த ஆண் நபர் கை மற்றும் கால்களால் தாக்கியதாக கூறினார். அவருக்கு வலது பக்க இடுப்பில் வலி இருந்து அவருக்கு நடப்பதற்கு சிரமம் இருந்தது. அதனால் அவரை மேல் சிகிச்சைக்கா தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைத்தேன். தூத்துக்குடி அரசு மருத்துவக்கல்லூரியில் அவருக்க வலது பக்க இடுப்பில் நுண்கதிர் படம் எடுக்கப்ட்டது., அதில் அவருக்கு வலது பக்க எலும்பு முறிவு ஏற்பட்டது. அதற்காக அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. அவருக்கு சிகிச்சை குறிப்பின் அடிப்படையில் அவருக்கு கொடுங்காயம் என சான்று வழங்கினேன். (**மேற்படி காயச்சான்றிதழ் அசா ஆ 3 ஆக குறியீடுசெய்யப்படுகிறது** ) போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் சென்ன காயம் இரு சக்கர வாகனத்தில் செல்லும் போது கீழே விழுந்தாலும் ஏற்படும் காயம் என்றால் சரிதான். Xray நான் எடுக்கவில்லை என்றால் சரிதான். காயம்பட்டவருக்கு ஏற்பட்ட காயம் சொன்ன நேரத்தில் இருந்து 2 மணி நேரத்திற்கு முன்போ அல்லது பின்போ ஏற்பட்ட காயம் என்றால் சரிதான்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

DHARANIDHARAN AMIRTHAVASAGAM

Digitally signed by DHARANIDHARAN AMIRTHAVASAGAM
Date: 2026.06.19 17:40:43 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
ஓட்டப்பிடாரம்.